# சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

**தாய்மொழி - தரம் 04 / இரண்டாந் தவணை - முதலாம் வாரம் ( $L_4$ $S_4$ $R_4$ $W_4$ )**

**தயாரிப்பு – இரத்தினபுரி கல்வி வலயம், ஆரம்பபிரிவு / ஆசிரிய ஆலோசகர் வீ.ராஜகுமாரி**

❖ சகலரும் பொதுவாக அறிந்திருக்க வேண்டியவற்றை அறியத் தருவன **அறிவித்தல்கள்** எனப்படும்.

**உ+ம்** – கண்ட இடங்களில் குப்பைகளை இடுவதைத் தவிர்க்கவும்.

❖ ஒருவர் பின்பற்றி நடப்பதற்கு உதவும் வகையில் அறிவுரை கூறுதல் **அறிவுறுத்தல்கள்** எனப்படும்.

**உ+ம்** – நாளை கடல் கொந்தளிப்பு ஏஏற்படலாம், கடலுக்குச் செல்ல வேண்டாம்.

❖ பின்வரும் விடயங்களை நன்கு வாசித்து **அறிவித்தலா, அறிவுறுத்தலா** என விடை கோட்டில் எழுதுக.

1). முதலாந் தவணைப் பரீட்சை பாடசாலை ஆரம்பிக்கும் முதல் வாரம் நடைபெறும். ................................

2). நாளை மறுதினம் பி.ப 3.00 மணிக்குப் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இல்ல விளையாட்டுப் போட்டி நடைபெறும். ................................

3). வினாக்களை நன்கு வாசித்த பின்னர், விடையெழுதத் தொடங்குக. ................................

4). தடித்த எழுத்திலுள்ள சொற்களுக்குரிய ஒத்த கருத்துச் சொற்களை புள்ளிக் கோட்டில் எழுதுக. ..............................

5). கூட்டுறவுக் கடை காலை எட்டு மணி முதல் மாலை ஐந்து மணி வரை திறந்திருக்கும். ...............................

6). வீடுகளில் நீர் தேங்கி நிற்கும் இடங்களைச் சுத்தமாக வைத்திருங்கள். ...............................

7). பேருந்தில் பயணச் சீட்டின்றிப் பயணிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். .......................

8). பொலித்தீன், பிளாஸ்திக் பொருட்களை கண்ட இடங்களில் வீசுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். ...............................

9). நித்திரை கொள்ளும் போது கைப்பேசியைத் தலையணைக்கு அருகில் வைக்க வேண்டாம். ................................

10). பொருட்களை வாங்கும் போது உற்பத்தித் திகதி, காலாவதியாகும் திகதி என்பவற்றைப் பார்த்து வாங்கவும். ...............................

11). கர்ப்பிணித் தாய்மார்களுக்காக இவ்வாசனம் ஒதுக்கப்பட்டுள்ளது. ...............................

12). வீதியைக் கடக்கும் போது வலப்பக்கமாவும், இடப்பக்கமாகவும் பார்த்து மீண்டும் வலப்பக்கமாகப் பார்த்து வெள்ளைக் கோட்டினூடாகக் கடக்க வேண்டும். ........................

13). இடி மின்னல் ஏற்படும் சந்தர்ப்பத்தில் கைப்பேசியைப் பயன்படுத்த வேண்டாம். ..............................

14). மின்சார வேலி செயற்படுகிறது. அபாயம். ..............................

15).கொரோனா வைரசுத் தொற்று மிக வேகமாக பரவுவதால், மக்கள் அனைவரும் பரிந்துரைக்கப்பட்ட சுகாதாரப் பழக்கங்களை பின்பற்றி நடக்கவும். ..............................